සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

පළමු වාර පරීක්ෂණය 2017 — 6 ශ්‍රේණිය
முதலாம் தவணைப் பரீட்சை 2017 — தரம் 6
**First Term Test 2017** — Grade 6

විද්‍යාව / விஞ்ஞானம் / Science } I — පැය දෙකයි / இரண்டு மணித்தியாலம் / Two Hour

සැළකිය යුතුයි.
(i) සියලු ම ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න. මෙම පත්‍රය සඳහා ලකුණු 40ක් හිමි වේ.
(ii) නිවැරදි පිළිතුර යටින් ඉරක් අඳින්න.

---

(01) அணைத்து அங்கிகளுக்குமான பொது இயல்பாக அமையாதது,
(i) சுவாசம். (ii) போசனை. (iii) ஒளித்தொகுப்பு. (iv)இனப்பெருக்கம்.

(02) சடப்பொருளாக பெயர் குறிப்பிடக்கூடியது,
(i) ஒளியாகும். (ii) வெப்பமாகும். (iii) நீராகும். (iv) ஒலியாகும்.

(03) பகல் வேளையில் தாவரங்கள் உள்ளெடுக்கும் வாயுவாக அமைவது,
(i) ஒட்சிசன் (ii) காபனீரொட்சைட்டு
(iii) ஐதரசன் (iv) நைதரசன்

(04) தெளிந்த சுண்ணாம்பு நீரை பால்நிறமாக மாற்றக்கூடியது.
(i) நீர் (ii) உப்பு (iii) காபனீரொட்சைட்டு (iv) ஒட்சிசன்

(05) ஊண்ணுன்னி விலங்கு.
(i) பல்லி (ii) யானை (iii) பசு (iv) மனிதன்

(06) உயிருள்ள, உயிரற்ற காரணி முறையே அமையும் விடையாவது,
(i) நுளம்பு, தென்னைமரம் (ii) தென்னைமரம், கருங்கல்
(iii) நீர், வளி (iv) தென்னைமரம், நீர்

(07) நுண்ணங்கிகளை இளகுவாக கண்டறிவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்.
(i) தொலைக்காட்டி (ii) கைவில்லை (iii) வெப்பமாணி (iv) இருவிழியன்


(08) தாவரங்களுக்கு மாத்திரமான பொது இயல்பு.
(i) வளர்ச்சி (ii) அசைவு (iii) ஒளித்தொகுப்பு (iv) இனப்பெருக்கம்

(09) நீர்த் தாவரமாவது,
(i) தென்னை (ii) தாமரை (iii) சேமன் (iv) ஐதரில்லா

(10) அங்கியின் உடலினுள் சக்தி உற்பத்தியாக்கப்படும் முறையாவது,
(i) வளர்ச்சி (ii) போசனை (iii) இனப்பெருக்கம் (iv) சுவாசம்

(11) நிறையை அளக்கப்படும் சர்வதேச அலகு,
(i) Kg (ii) g (iii) Mg (iv) cg

(12) அளவுச்சாடியில் திருத்தமாக அளவிட கண் இருக்கவேண்டிய சரியான அமைவிடம்,




(i) A
(ii) B
(iii) C
(iv) D

(13) සරල පත්‍රයක් වන්නේ,
(i) தொட்டாற்சுருங்கி (ii) கரிவேப்பிலை (iii) பலா (iv) இப்பில்

(14) நொருங்கும் இயல்பு கொண்ட திரவியம்,
(i) கரி (ii) இறப்பர (iii) டின் (iv) இரும்பு

(15) நீரின் திண்ம நிலையாக அமையாதது,
(i) பனியாறு (ii) மூடுபனி (iii) பணிகட்டி (iv) மழை

(16) வாயு நிலையில் நீருக்கான உதாரணமாவது,
(i) பனி (ii) பனியாறு (iii) நீராவி (iv) பணிகட்டி

(17) நீர் பெறப்படும் மூலமாக கருதப்படாதது,
(i) படிவுவீழ்ச்சி (ii) மேற்பரப்பு நீர் (iii) சவர் நீர் (iv) நிலக்கீழ் நீர்

(18) புவியில் பயன்யன்படுத்தகூடிய நீரின் அளவு நூற்றுவீதத்தில்,
(i) 0.01% (ii) 0.01 (iii) 1% (iv) 10%

(19) திட்டமான வடிவமற்றது ஆனால் திட்டமான கனவளவைக் கொண்டது,
(i) இரும்பு (ii) வளி (iii) நீர் (iv) பணிகட்டி

(20) சிறந்த மின்கடத்தி திரவியமாவது,
(i) கண்ணாடி (ii) இறப்பர் (iii) செப்பு (iv) பிளாத்திற்கு

## II -பகுதி

- முதலாம் வினாவுக்கும் மேலும் 04 வினாக்களுக்கும் விடைத்தருக.

(01) (A) கீழேயுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) அடையாளத்தையும், பிழையாயின் (✗) அடையாளத்தையும் கூட்டினுள் இடுக.

(i) பாத்திரங்கள் இல்லாமல் பதார்த்தங்களை களஞ்சியப்படுத்தலாம். ( )
(ii) நமது சூழலில் உள்ளவற்றை சடப்பொருட்கள், சக்தி என இருபிரதான பிரிவுகளாக பிரிக்கலாம். ( )
(iii) கண்ணாடி நொருங்கும் இயல்புள்ள பொருளாகும். ( )
(iv) வளர்ச்சி, போசணை , அங்கியின் இயல்பாகும். ( )
(v) கழிமுகங்களில் சவர்நீர் காணப்படும். ( )
(vi) நச்சு இரசாயன பதார்த்தங்கள் நீருடன் கலப்பதனால் மனிதனுக்கு சிறுநீரக நோய் ஏற்படுகின்றது. ( )
(vii) நீர் திண்மம், திரவம் , வாயு ஆகிய மூன்று நிலைகளிலும் காணப்படுகின்றது. ( )
(viii) விலங்குகள் போன்று தாவரங்களுக்கும் இடம்பெயர முடியும். ( )


(B) தொடர்புபடுத்துக.

| | | |
|---|---|---|
| (i) | மீள்தன்மை கொண்ட பொருள். | இனப்பெருக்கம் |
| (ii) | அங்கியின் இயல்பு. | மாமரம் |
| (iii) | குடிப்பதற்கு சிறந்த சுத்தமான நீர் | காபனீரொட்சைட்டு |
| (iv) | தனக்கு தேவையான உணவை தாமே தயாரிக்கும் அங்கி | இறப்பர் |
| (v) | ஒருவித்திலை தாவரம். | ஒலி |
| (vi) | இருவித்திலை தாவரம். | தற்போசணி |
| (vii) | தாவரத்தில் உணவு தயாரிக்க தேவையாது. | நன்னீர் |
| (viii) | திணிவற்ற இடத்தைப்பிடித்து கொள்ளாத பொருள். | தென்னை |

(பு. 1 x 16)

(02) கீழேயுள்ள செயற்பாட்டை கொண்டு வினாக்களுக்கு விடைத்தருக.

போத்தல்




(a) (b)

(i) இவ் செயற்பாட்டை மேற்கொள்ளும் போது a சந்தர்ப்பத்தின் போது கிடைக்கும் அவதானம் ஒன்று தருக. (பு. 2)

(ii) மேற்கூறப்பட்ட அவதானத்திற்கான காரணம் யாது (பு. 2)

(iii) b சந்தர்ப்பத்தின் போது கிடைக்கும் அவதானம் ஒன்று தருக. (பு. 2)

(iv) a யில் போத்தலில் நிரப்பபட்டுள்ள பதார்த்தம் யாது? (பு. 2)

(v) b யில் மேற்கூறப்பட்ட அவதானத்திற்கான காரணம் யாது . (பு. 2)

(vi) இவ் முழுச் செயற்பாடும் மேற்கொள்ளப்படுவது பதார்த்தின் அவ் இயல்பை அறிவதற்கு? (பு. 1)

(03) சூழலில் உள்ளவற்றை உயிருள்ளவை உயிரற்றவை என இளகுவாக கண்டறியலாம்

(i) உயிருள்ள, உயிரற்ற பொருட்கள் 02 வீதம் தருக. (பு. 2)

(ii) அங்கியை பிரிக்ககூடிய பிரதான முறைகள் 03 தருக. (பு. 3)

(iii) அங்கியின் சிறப்பயலிபுகள் 03 எழுதுக. (பு. 3)

(iv) தெளிந்த சுண்ணாம்பு நீர் கொண்டபரிசோதனைகுழாயை ஊதும் போது பெறக்கூடிய அவதானம் யாது (பு. 1)

(v) அவ் அவதானத்திற்கு காரணமான வாயு எது? (பு. 1)

(vi) அவ் வாயுவை சூழலுக்கு வெளியிடும் அங்கி எது? (பு. 1)

(04) சுற்று சூழலை அழங்கரிப்பதில் தாவரம் பெரும் பங்குவகிக்கின்றது.

(i) தாவர பல்வகைமையில் செல்வாக்கு செலுத்தும் தாவரத்திலுள்ள காரணி 02 தருக (பு. 2)

(ii) தாவர பல்வகைமையில் தாவரத்தின் பருமன்னுகேற்ப புல் பூண்டு மரம் செடி கொடி ஆகியவற்றுக்கு உதாரணம் தருக. (பு.4)

(iii) தாவரத்தின் பிரதான வேர்வகை 02யும் குறிப்பிடுக. (பு. 2)

(iv) நாய், வண்ணத்திப்பூச்சி, கோழி, பசு, பாம்பு, மண்புழு ஆகிய விலங்குகளை இணைக்கவர்ச்சுட்டி மூலம் வேறுப்படுத்துக. (பு. 3)

(05) எங்களது சூழல் சடப்பொருள், சக்தி ஆகியவற்றால் உருவாக்கப்பட்டுள்ளது

(i) சடப்பொருள் என்றால் என்ன. (பு. 2)

(ii) சடப்பொருட்களை பிரிக்ககூடிய பிரதான 03 முறைகளும் எவை. (பு. 3)


(iii) திட்டமான உருவமும் திட்டமான கனவளவும் கொண்ட பொருட்களை எவ்வாறு அழைப்பர்? (பு. 1)

(iv) நீங்கள் மேலே கூறிய பொருளின் சிறப்பியல்பு 02 எழுதுக. (பு. 2)

(v) அவ்வாறான பொருட்களுக்கு உதாரணம் 02 தருக. (பு. 2)

(vi) கம்பி தயாரிப்பதற்கு செப்பு அலுமினியம் போன்ற உலோகபொருட்கள் பயன்படுத்துவது அதன் எவ்வியல்பு காரணமாக? (பு. 1)

(06) மாணவர்கள் சிலர் நீர் தொடர்பாக மேற்கொண்ட செயற்பாடு வருமாறு.




(i) இப்பரிசோதனை மேற்கொள்வதன் நோக்கம் யாது? (பு. 2)

(ii) இதன் போது நீருக்குள் பணிக்கட்டி இட்டவுடன் பெறக்கூடிய அவதானம் 02 தருக. (பு. 2)

(iii) நீர் பெறப்படும் மூலகம் மூன்றில் ஒன்று படிவுவீழ்ச்சி இரண்டாவது மேற்பரப்புநீர் மூன்றாவது எது? (பு. 1)

(iv) உப்பு அடங்கியுள்ள அளவின் அடிப்படையில் நீரை எவ்வாறு வகைப்படுத்தலாம் (பு. 3)

(v) அதில் ஒன்று காணப்படும் இடத்தினை பெயரிடுக. (பு. 1)

(vi) அங்கிகளுக்கு நீர் அவசியமென்பதற்கு 02 காரணங்கள் தருக. (பு. 2)